# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.19/2012**

திரு.எம். உலகநாதன்,
த/பெ. முருகையன்,
வடக்கு நரியங்குடி,
உல்லியக்குடி (அஞ்சல்),
உடையார் பாளையம் (வட்டம்),
அரியலூர் மாவட்டம், ... மேல்முறையீட்டாளர்
(திரு. எம். உலகநாதன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரம்பலூர். ... எதிர் மனுதாரர்
(திரு. தேவராஜ்/செயற் பொறியாளர் 12.7.2012 அன்றும்
திரு. ஆர். ராஜதுரை உதவி செயற் பொறியாளர் மற்றும்
வி.ஜி.பிரதாப் இளநிலை பொறியாளர், சுத்தமல்லி அவர்கள்
18.9.2012 அன்றும் கலந்துகொண்டனர்)

**கேட்புரை நாள் 12.7.2012 & 18.9.2012**

**ஆணை நாள் : 21–01–2013**

வடக்கு நரியங்குடி திரு. எம்.உலகநாதன், அவர்களின் 25.4.2012 தேதியிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.19/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற் கூறிய மேல் முறையீட்டு மனு எண்.19/2012 ன் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.7.2012 மற்றும் 18.9.2012 அன்று நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை, பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் இருதரப்பின் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து மின் குறை தீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) <u>மேல் முறையீட்டாளரின் வேண்டுகோள்:</u>

மேல் முறையீட்டாளர் தனக்கு பிறகு தயார் நிலை பதிவு செய்தவர்களுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்றும் , தனக்கு விரைவில் ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு (one pole extension) பிரிவில் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) <u>வழக்கின் சுருக்கம்:</u>

வடக்கு நரியங்குழி திரு.எம். உலகநாதன் அவர்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி 6.10.1999 அன்று விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளார். புதிய வீராணம் சிறப்பு திட்டத்தின் கீழும் 22.7.2005 அன்று பதிவு செய்துள்ளர். அதில் அவரது பதிவு எண்.399 ஆகும். அவருக்கு பின்னால் பதிவு செய்த (பதிவு எண்.438) திருமதி பிச்சையம்மாளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. திருமதி பிச்சையம்மாளுக்கு ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு என்ற பிரிவில் (one pole extension) வந்ததாலும், மேல் முறையீட்டாளர் சிறுவிஸ்தரிப்பு (minor extension) என்ற பிரிவில் வந்ததாலும், திருமதி. பச்சையம்மாளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டது என்று உரிமம் தாரர் தெரிவித்துள்ளார். திரு.எம்.உலகநாதன் அவர்கள் தன்னுடைய ஆழ்குழாய் கிணறும் 70 மீட்டருக்குள்தான் உள்ளது எனவே அவரது விண்ணப்பமும் ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு என்ற பிரிவில்தான் வரும் என்று தெரிவித்ததால், மின்நுகர்வோர், குறைதீர்க்கும் மன்றம் பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் மேல் முறையீட்டாளரின் ஆழ் துளை கிணறு 18.10.2010 க்கு முன்னர் நடப்பட்ட கம்பத்திலிருந்து 70 மீட்டருக்குள் இருக்கிறதா என்று தெளிவுபடுத்த ஆணை பிறப்பித்தது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் உரிமம் தாரர் எடுக்கவில்லை என்று மின்குறைதீர்ப்பாளரிடம் மேல் முறையீட்டு மனு செய்யப்பட்டுள்ளது.

3) <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

மேல் முறையீட்டாளர் தன்னுடைய மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்:

i) செயற் பொறியாளர் அரியலூர் அவர்களது அலுவலகத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி 6.10.1999ல் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டது. பதிவு எண்.266 ஆகும்.

ii) மீண்டும் வீராணம் சிறப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பம் 22.7.2005 அன்று பதிவு செய்யப்பட்டது. பதிவு எண்.399.

iii) பதிவு எண்.398 ற்கு மின் இணைப்பு வழங்கி ஒரு வருட காலத்திற்கு மேல் ஆகிறது.

iv) வரிசை முறையில் மேல் முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்காமல், அவருக்கு பின்னால் பதிவு செய்த திருமதி.பச்சையம்மாள் என்பவருக்கு சுத்தமல்லி மின்சார பிரிவு அலுவலகம் மின் இணைப்பு வழங்கியுள்ளது,

v) மேல் முறையீட்டாளருக்கும் ஒரு கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்கலாம்.

vi) பெரம்பலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மேல் முறையீட்டாளரின் ஆழ்குழாய் கிணறு ஏற்கனவே உள்ள மின் கம்பத்திலிருந்து 70 மீட்டருக்குள் இருக்கின்றதா என்பதனை 26.3.2012க்குள் தெளிவுபடுத்த வேண்டும் என்று தீர்ப்பு அளித்திருந்தது. ஆனால் இதுவரை எதிர் மனுதாரரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**4) <u>எதிர் மனுதாரரின் பதிலுரை</u>:**

எதிர் மனுதாரர், கீழ்க்கண்ட வதங்களை தன்னுடைய பதிலுரையில் தெரிவித்துள்ளார்.

i) வடக்கு நரியங்குழி திரு. உலகநாதன் த/பெ. முருகையன், அவர்கள் உல்லியக்குடி வருவாய் கிராமம் புல எண்.190/6B மின்பளு 7.5 குதிரை திறனுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு எண்.266 நாள் 6.10.1999 மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விவசாய விண்ணப்பம் பதிவு செய்திருந்தார்.

ii) மேற்படி விண்ணப்பத்திற்கு புதிய வீராணம் சிறப்பு திட்டத்தில் 90 நாள் அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டு 22.7.2005 அன்று தயார் நிலை பதிவு செய்துள்ளார். தயார்நிலை பதிவு எண்.399, புதிய வீராணம் சிறப்பு திட்டத்தில் பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்கு ஆண்டுதோறும் அரசு வழங்கும் இலக்கீட்டின் படி விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

iii) 18.10.2010 அன்று தமிழக அரசால் தமிழகம் முழுவதும் இரண்டு லட்சம் விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் முகமாக ஏற்கனவே தயார் நிலை பதிவு செய்தவர்களை கீழ்க்கண்ட ஏழு பிரிவுகளில் வகைப்படுத்தி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. அருகாமை மின்னிணைப்பு | – | Mere Service Connection |
| 2. ஒரு இடைக்கம்பம் | – | Insertion of one pole |
| 3. கம்பி மாற்றுதல் | – | Conversion |
| 4. ஒரு கம்பம் விஸ்தரிப்பு | – | One pole extension |
| 5. ஒரு இடைக்கம்பம் மற்றும் ஒரு கம்பம் விஸ்தரிப்பு | – – | One pole insertion with on Pole extension |
| 6. சிறு விஸ்தரிப்பு | – | Minor |
| 7. மின்மாற்றி நிறுவுதல் போன்ற அதிகப்படியான வேலைகள் | – | Major |

நிலுவையில் இருந்த அனைத்து தயார்நிலை பதிவுகளும் மேற்குறிப்பிட்ட 7 பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டு பின்னர் முதல் 5 பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டவர்களுக்கு முதலில் மின்னிணைப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மின்னிணைப்பும் வழங்கப்பட்டது.

iv) தயார்நிலை பதிவு எண்.398, நாள் 22.7.2005 திரு. இராதாகிருஷ்ணன் என்பவருக்கு அருகாமை மின்னிணைப்பு பிரிவில் (Mere Service Connection) 15.4.2011 –ல் மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

v) திருமதி. பிச்சையம்மாள் (தயார்நிலை பதிவு எண்.438/ நாள் 25.7.2005) என்பவருக்கு ஒரு கம்பம் விஸ்தரிப்பு பிரிவில் (one pole extension) 13.5.2011 அன்று மின்னிணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் மனுதாரர் திரு. உலகநாதன் சிறுவிஸ்தரிப்பு பிரிவில் 47 வது முன்னுரிமையில் இருந்தார்.

vi) ஒரு கம்பம் விஸ்தரிப்பு பிரிவில் மின்னிணைப்பு பெற 18.10.2010 நிலவரப்படி ஏற்கனவே நடப்பட்ட கம்பத்திலிருந்து 70 மீட்டருக்குள் கிணறு இருக்க வேண்டும். திரு.உலகநாதன் அவர்களுக்கு சொந்தமான புல எண்.190/6B –ல் உள்ள கிணறு எற்கனவே (18.10.2010 முன்னர்) நடப்பட்ட கம்பத்திலிருந்து 81 மீட்டர் தொலைவில் இருந்ததால் சிறு விஸ்தரிப்பு பிரிவில் வகைப்படுத்தப்பட்டார்.

vii) திருமதி. பிச்சையம்மாள் என்பவருக்கு ஒரு கம்பம் விஸ்தரிப்பு பிரிவில் ஒரு கம்பம் நடப்பட்டு மின்னிணைப்பு வழங்கப்பட்டது. இந்த மின்னிணைப்பு வழங்கப்பட்ட பின்னர் தான் மின்னிணைப்பு வழங்கப்பட்ட கம்பத்திலிருந்து திரு. உலகநாதன் அவர்களுக்கு சொந்தமான கிணறு தற்சமயம் 54 மீட்டர்

தொலைவில் உள்ளது. இந்நிலையில் திரு. உலகநாதன் அவர்களின் தயார்நிலை பதிவை ஒரு கம்பம் விஸ்தரிப்பு பிரிவில் வகைப்படுத்த இயலாது.

viii) இந்நிலையினை தலைவர் / நுகர்வோர் குறைத்தீர் மன்றம் / பெரம்பலூர் அவர்களால் (மனு எண்.10/2011–2012 நாள் 6.3.2012) தீவிர விசாரணை செய்து அளிக்கப்பட்ட தீர்ப்பில் விளக்கப்பட்டது. தீர்ப்பின் படி 20.3.2012 அன்று மனுதாரர் கூட்டு ஆய்வுக்கு அழைக்கப்பட்டார். அவர் தனது அலுவலுக்கு சென்று விட்டதால் 24.3.2012 அன்று உதவி மின்பொறியாளர் / இகா / சுத்தமல்லி மனுதாரருடன் கூட்டாக ஆய்வு செய்து மேற்கண்ட விவரங்கள் தெளிவுப்படுத்தப்பட்டது.

**5) <u>கேட்புரை:</u>**

மேல் முறையீட்டாளருக்கும் மற்றும் எதிர் மனுதாரருக்கும் அவர்களின் கோரிக்கைகளையும், வாதங்களையும் நேரில் பதிவு செய்வதற்கு வசதியாக 12.7.2012 அன்று மின் குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது. மேலும், மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளை ஏற்று 18.9.2012 அன்று மேலும் ஒரு கேட்புரை நடத்தப்பட்டது.

**6) <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

**6.1** மேல்முறையீட்டாளர் திரு.எம். உலகநாதன் அவர்கள் இரண்டு கேட்புரை நாட்களிலும் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

**6.2** மேல் முறையீட்டாளர், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த வேறு விண்ணப்பதாரரின் மனுவிற்கு தான் 2008 வருடம் ஆட்சேபனை தெரிவித்ததால், வேண்டும் என்றே தன்னுடைய விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு இடைஞ்சல்கள் செய்வதாக கூறினார்.

**6.3** தன்னுடைய நிலத்தில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் உள்ளதாகவும், அதில் ஒன்று புதியதாக போடப்பட்டது என்றும், தான் மின் இணைப்பு பெற விண்ணப்பித்த ஆழ்குழாய் கிணறு 1995 ல் போடப்பட்டது என்றும் தெரிவித்து இதில் எந்த ஆழ்குழாய் கிணற்றிற்கு அளவு எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை என்று தெரிவித்தார்.

**6.4** மேலும் 24.3.2012 ம் தேதி மறுபடியும், மின்கம்பத்திற்கும் அவரது ஆழ்குழாய் கிணற்றிற்கும் உள்ள தூரத்தை ஆய்வு செய்தது தனக்கு தெரியாது என்றும் கூறினார். மேலும் மின்குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பின்படி தன்னுடைய ஆழ்குழாய் கிணறு

மின்கம்பத்திலிருந்து 70 மீட்டருக்குள் இருக்கிறதா என்பதை இன்றுவரை தெளிவுபடுத்தப்படவில்லை என்று கூறினார்.

**6.5** அவர் தனது விண்ணப்பம் ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு (one pole extension) என்ற பிரிவில் வரவேண்டும் என்றால் தன்னுடைய ஆழ்குழாய் கிணற்றிற்கும் **18.10.2010** க்கு முன் நடப்பட்ட மின் கம்பத்திற்கும் உள்ள இடைப்பட்ட தூரம் 70 மீ ட்டருக்குள் இருக்க வேண்டும் என்ற வாரிய விதிக்கு தான் மறுப்பு சொல்லவில்லை என்றும், **18.10.2010** ற்கு பின்பு கொடுக்கப்பட்ட திருமதி. பிச்சையம்மாளின், மின் இணைப்பிலிருந்து தன்னுடைய ஆழ்குழாய் கிணற்றிற்கு உள்ள தூரத்தை கணக்கீட்டு தனக்கு ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு என்ற பிரிவில் மின் இணைப்பு வழங்க கேட்கவில்லை என்றும் தெரிவித்தார்.

**6.6** மேலும் அவர் தன் முன்னிலையில் **18.10.2010** நாளிற்கு முன் நடப்பட்ட கம்பத்திலிருந்து தன்னுடைய ஆழ்குழாய் கிணற்றிற்கும் இடையிலும் உள்ள தூரம் அளக்கப்பட்டு அது 70 மீட்டருக்கு மேலிருந்தால் தன்னுடைய விண்ணபத்திற்கு சிறு விஸ்தரிப்பு பிரிவில் (Minor estimate) தன்னுடைய வரிசை வரும்பொழுது, விவசாய மின் இணைப்பை பெறுவதில் தனக்கு சம்மதம் என்றும் கூறினார்.

**6.7** **18.9.2012**இல் மேல்முறையீட்டாளர் உலகநாதன் அவர்களிடம் உல்லியங்குடி கிராம நிர்வாக அலுவலர், அவர்கள், 8’’ விட்டம் உள்ள PVC பைப் கட்டிய போர்தான் **13.5.2011** அன்று அவர் சான்று வழங்கிய போதும் இருந்த போர் என்று தெரிவித்துள்ளார் என்பது தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேல்முறையீட்டளார் கிராம நிர்வாக அலுவலர் 5’’ போர்தான் முன்பே இருந்தது என்று அளவு எடுத்த அன்று கூறினார் என்று தெரிவித்து கிராம நிர்வாக அலுவலர் தற்பொழுது ஏன் மாற்றி சான்றளித்துள்ளார் என்று தெரியவில்லை என்று கூறினார்.

**7)** **<u>எதிர் மனுதாரரின் வாதங்கள்</u>:**

**7.1** அரியலூர் திரு. தேவராஜ், செயற்பொறியாளர்/இ–ப, அவர்கள், எதிர் மனுதாரரின் சார்பாக தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார். அவர், எதிர் மனுதாரரின் பதிலுரையில் தெரிவித்தவாதங்களை திரும்பவும் வலியுறுத்தித் தெரிவித்தார்.

**7.2** அரியலூர் செயற்பொறியாளர் / இ.ப., அவர்கள், மேல் முறையீட்டாளர் இரண்டு ஆழ்குழாய் கிணறு உள்ளது என்று தற்பொழுதுதான் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்தார்.

**7.3** மேலும் அவர் கோரைக் குழி மின் மாற்றி II ன் LT layout ஐ சமர்பித்து அதில் மேல் முறையீட்டாளரின் ஆழ் குழாய் இருக்கும் இடம் **18.10.2010** நாளிற்கு முன்பு நடப்பட்ட கம்பத்திலிருந்து **81** மீட்டர் என்றும் திருமதி ந.பிச்சையம்மாள் அவர்களுக்கு **13.5.2011** அன்று வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பு எண் **372** ன் கம்பத்திலிருந்து தான் அது **54** மீட்டரில் உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், வாரிய விதிகளின்படி, திருமதி. பிச்சையம்மாளுக்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பின் கம்பத்திலிருந்து எடுக்கப்பட்ட அளவை கொண்டு, மனுதாரரின் விண்ணப்பம் ஒருகம்பம் விஸ்தரிப்பு பிரிவில் வருகிறது என்று எடுத்துக்கொள்ள முடியாது ஏனெனில் அது **18.10.2010** க்கு பின்பு நடப்பட்ட கம்பம் என்றும் தெரிவித்தார்.

**7.4** மேலும் அவர் தற்பொழுது, **2** லட்சம் விவசாய மின் இணைப்பு மற்றும் (Normal) என்ற இரண்டு திட்டங்களும் (scheme) இணைக்கப்பட்டு ஒரே திட்டமாக (scheme) மாற்றப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார். மேலும், சிறுவிஸ்தரிப்பு மற்றும் பெரு விஸ்தரிப்பு இரண்டும் ஒரே வரிசையில் வரிசைபடுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

**7.5** மேல் முறையீட்டாளரின் விண்ணப்பம், தற்பொழுது வரிசை எண்.**69** ல் உள்ளது என்றும் அது இந்த வருட குறியீட்டுக்குள்தான் உள்ளது என்றும் எனவே **2012–13** ல் அந்த விண்ணப்பத்திற்கான மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் கூறினார்.

**7.6** மேலும், மேல் முறையீட்டாளரின் முன்னிலையில் கூட்டாக மறுபடியும் மின் கம்பத்திற்கும் அவருடைய ஆழ்குழாய் கிணற்றிற்கும் இடையில் உள்ள தூரத்தை தெளிவுபடுத்த தான் சம்மதிப்பதாகவும் கூறினார்.

7.7 **18.9.2012** நடந்த கேட்புரையில் உதவி செயற்பொறியாளர்/ நகரம்/ ஜெயங்கொண்டான், திரு. ஆர். இராஜதுரை, அவர்களும் திரு. வி.ஜி. பிரதாப் இளநிலை பொறியாளர் சுத்தமல்லி அவர்களும் கலந்து கொண்டனர்.

7.8 திரு. இராஜதுரை, உதவிச் செயற்பொறியாளர் அவர்கள், **8''** போர் ஆழ்குழாய் கிணறு தான் முதலில் உள்ள ஆழ்துளை கிணறு என்று கிராம நிர்வாக அலுவலர் சான்றளித்துள்ளதாக கூறினார். எனவே, மேல்முறையீட்டாளருக்கு ஒரு கம்பம் நட்டு, விஸ்தரிப்பு என்ற பிரிவில் விவசாய மின்இணைப்பு வழங்க விதிகளில் வழிஇல்லை என்று தெரிவித்தனர். மேலும், அவரின் விவசாய மின்இணைப்பு இந்த வருட **2012–13** இலக்கீட்டில் உள்ளதால், அவரின் வரிசை மூப்பின்படி (priority) மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

8. <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துமூலமாக கொடுக்கப்பட்ட வாதுரை –</u>

8.1 18.9.2012 நடந்த கேட்புரைக்கு பின் மேல்முறையீட்டாளர் தன்னுடைய தேதியிடப்படாத கடிதத்தில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

(i) 18.9.2012ம் தேதியில் மின்சார துறையினர் மூலம் 8'' அங்குலம் போர் பழையது என 4.8.2012 தேதியில் வழங்கிய வி.ஏ.ஓ சான்று என தங்களிடம் கொடுத்தார்கள். இதற்கு நான் 16.7.2012ம் தேதியில் ஆய்வு செய்யும்பொழுது வாங்காமல் தனிப்பட்ட தேதியில் 4.8.2012இல் எதற்கு வி.ஏ.ஓவிடம் வாங்கினீர்கள் என நான் வாதம் செய்தேன்.

(ii) இச்சான்று தொடர்பாக ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அவர்களிடம் 21.9.2012ல் ஆழ்குழாய் கிணறு பதிவு தொடர்பாக எனது மனுவைக் கொடுத்தேன். இதனை வட்டாட்சியர் ஏற்றுக் கொண்டு வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு விசாரணைக்கு மனுவை அனுப்பி வைத்தால் விசாரணை செய்து ஆவணங்களை சரிபார்த்து எனது 8 அங்குல PVC பைப்பு போரை பிந்தியதாக வருவாய் பதிவேட்டில் பதிவு செய்து 5 அங்குலம் PVC பைப்பு கட்டிய போர் முதலில் போட்ட போர் என வி.ஏ.ஓ. சான்று கொடுத்து உள்ளார்.

(iii) 13.5.2011 மற்றும் 16.7.2011ல் நடைபெற்ற ஆய்வு அறிக்கை சான்றையும் மற்றும் 24.9.2012ல் புதிய போர் என பதிவு செய்து வி.ஏ.ஓ வழங்கிய வரைபட சான்றையும் பார்த்தால் எந்த போர் பழைய மற்றும் புதிய போர் என தங்களுக்கு தெரியும். 24.9.2012ம் தேதியில் 8 அங்குலம் போர் புதியதாக பதிவு செய்யப்பட்டு உள்ளது என்பதும் 13.5.2011இல் வழங்கிய வி.ஏ.ஓ வரைபட சான்றை பார்த்தால் 8 அங்குல போர் பதிவு செய்யப்படவில்லை என்பதும் 5 அங்குல போர் முதலில் பதிவு செய்யப்பட்ட பழைய போர் என தெரியும்.

8.2 மேலும் உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய 24.9.2012 நாளிட்ட சான்றையும் இணைத்திருந்தார். மேற்படி உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் சான்றின்படி 5 அங்குலம் போர்வெல் தான் முதன்முதலாக போடப்பட்டுள்ளது என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

9. <u>மின்குறைதீர்பாளரின் தீர்வு</u> :

9.1 மேல் முறையீட்டாளரின் வாதங்களையும், எதிர் மனுதாரரின் வாதங்களையும், ஆராய்ந்த பொழுது, இந்த வழக்கில் வழக்கெழு வினாவாக தெரிவது மேல் முறையீட்டாளரின் ஆழ்குழாய் கிணற்றிற்கும், 18.10.2010 ஆம் தேதிக்கு முன்பு நடப்பட்ட மின் கம்பத்திற்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு என்பதுதான் என்று தெரிகிறது. மேலும் மேல் முறையீட்டாளரும் தன்னுடைய

நிலத்திலுள்ள இரண்டு ஆழ்குழாய் கிணற்றில் எந்த கிணற்றின் அளவு எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை என்றும், தன்னுடைய முன்னிலையில் அளவு எடுக்கப்பட்டால் தான் அதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

**9.2** எதிர் மனுதாரரின் சார்பில் விசாரணையில் பங்கு பெற்ற செயற் பொறியாளரும், மின் கம்பத்திற்கும், ஆழ்துழை கிணற்றிற்கும் இடையில் உள்ள தூரம் 70 மீட்டருக்குள் இருந்தால் மேல் முறையீட்டாளருக்கு ஒரு கம்பம் விஸ்தரிப்பில் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

**9.3** மின்குறைதீர்ப்பாளர், மேல் முறையீட்டாளரும் எதிர் மனுதாரரும் சேர்ந்து மின்கம்பத்திற்கும் (18.10.2010க்குள் நடப்பட்ட) மேல்முறையீட்டாளரின் ஆழ்குழாய் கிணற்றிற்கும் உள்ள தூரத்தை மறுபடியும் அளவீடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கு இருவருமே, சம்மதம் தெரிவித்து, வரும் 16.7.2012 அன்று அளவீடு செய்து தகவல் அளிப்பதாக கூறியுள்ளனர்.

**9.4** கள ஆய்வு 16.7.2012 அன்று நடைபெற்றது என்ற தகவலை மேல்முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் அனுப்பியுள்ளார். ஆந்த ஆய்வு அறிக்கையில் கிராம நிர்வாக அலுவலர் திரு. கோவிந்தராஜ், மேல்முறையீட்டாளர் திரு. எம். உலகநாதன், மற்றும் உதவி மின் பொறியாளரும் கையொப்பம் இட்டுள்ளனர். மேலும், மேற்படி புல எண்ணில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கும், மின்கம்பத்திற்கும் இடையிலுள்ள தூரத்தை அளவிடும் பொழுது செயற் பொறியாளரும், உதவி செயற்பொறியாளரும் உடன் இருந்தனர் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**9.5** அந்த கள ஆய்வு அறிக்கையின்படி புல எண் 190/6B ல் இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று 8 அங்குல விட்டம் கொண்ட ஆழ்குழாய் கிணறு ஆகும். மற்றொன்று 5 அங்குலம் விட்டம் கொண்ட ஆழ்குழாய் கிணறு ஆகும். 8 அங்குல விட்டம் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கும், மின் கம்பத்திற்கும் இடையில் உள்ள தூரம் 81 மீட்டர் என்றும், 5 அங்குல விட்டம் கொண்ட ஆழ்குழாய் கிணற்றிற்கும் மின் கம்பத்திற்கும் இடையில் உள்ள தூரம் 62 மீட்டர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.6** மேல் முறையீட்டாளர், தன்னுடைய 26.7.2012 கடிதத்தில் 5 அங்குல ஆழ்துளை கிணறுதான், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த பொழுது இருந்த ஆழ்துளை கிணறு என்றும், 8 அங்குல ஆழ்துளை கிணறு தற்பொழுது 15.10.2011 போடப்பட்டது என்றும்

அதற்கு ஆதாரமாக அவர் சக்தி முருகன் கம்பெனியில் 8 அங்குல பி.வி.சி குழாய் வாங்கிய Bill No.S-15722/FP dt.15-10-2011 ன் நகலையும் சமர்பித்துள்ளனர். மேலும் அவர் 6.10.1999 ல் வாரியத்தில் பதிவு செய்யும் பொழுது கொடுக்கப்பட்ட கிராம அலுவலரின் சான்றளிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் மற்றும் 17.5.2005 ல் அளிக்கப்பட்ட கிராம அலுவலரின் சான்றளிக்கப்பட்ட வரைபடத்தின் நகல்களை அனுப்பியுள்ளார்.

**9.7** மேலும் அவர் தன்னுடைய 9.8.2012 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட தகவல்களை தெரிவித்து இவைகளை ஆராய்ந்து பார்த்தால் 15.10.2011இல் போட்ட போர் புதியது என்று தெரியவரும் என்றும் தெரிவித்துள்ளார்.

**9.8** மின்சார வாரியம் மீது 146/2008 என ஒரு வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்ததால் சுத்தமல்லி மின்சார பிரிவு அலுவலகம் அவரை வீண் அலைச்சல் மன உளச்சல் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. 24.3.2012 தேதியில் தள ஆய்வு நடந்தது என்றும் அவரிடம் ஆய்வு அறிக்கை நகல் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது ஆகும். 16.7.2012 தேதியில் மட்டும் அவரது பார்வையில் அளவீடு செய்து ஒப்புதல் பெறப்பட்டது என்பதுதான் உண்மை.

**9.9** அவரது மனு மீதான 12.7.2012 தேதியில் நடந்த விசாரணையில் தங்களது அலுவலகத்தில் ஒரு உதவி மின் பொறியாளரும் ஆய்வு அறிக்கையில் வேறு ஒரு உதவி மின்பொறியாளரும் மற்றும் 6.3.2012 தேதியில் வேறு ஒரு உதவி மின் பொறியாளரும் அலுவலகத்தில் கையொப்பம் செய்து இருப்பதும் அவர்கள் வருகை பதிவேட்டினை ஆய்வு செய்தால் இந்த விவரம் உண்மை என தெரிய வரும். இது வே சட்டத்திற்கு புறம்பான செயல் ஆகும்.

**9.10** அவரது மனுவை மீண்டும் மறு விசாரணை நேரில் செய்து அவருக்கு மின்னிணைப்பு சுமார் ஒரு வருடம் காலமாக வழங்காமல் மன உளச்சல் ஏற்படுத்தி வீண் அலைச்சல் உண்டாக்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து அவருக்கு மின்னிணைப்பு வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

**9.11** எதிர் மனுதாரரும், அவருடைய 23.7.2012 ல் கள ஆய்வு அறிக்கையின் நகலை அனுப்பியுள்ளார். ஆனால் அவர் 8 அங்குல விட்டம் கொண்ட ஆழ்துளை கிணறுதான் குறைதீர்மன்றத்தின் உத்தரவுபடி 24.3.2012 அன்று நடைபெற்ற ஆய்வின்பொழுது அளக்கப்பட்டது என்றும் அந்த சமயம் அந்த ஒரு ஆழ்துளை கிணறு மட்டும் தான் இருந்தது

என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 16.7.2012 அன்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற ஆய்வில் மேற்கண்ட ஆழ்குழாய் கிணற்றுடன் கூடுதலாக புதிய ஆழ்குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டது கண்டறியப்பட்டு, இரண்டு ஆழ்குழாய் கிணற்றிற்கும் அருகிலுள்ள மின்கம்பத்திற்கும் இடைப்பட்ட தூரம் அளக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளனர்.

**9.12** 13.5.2011 அன்று உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் (பொறுப்பு) அவர்களால் கையொப்பமிட்டு அளிக்கப்பட்ட ஆவணத்தில் புல எண் 190/6B ல் ஒரே ஒரு ஆழ்குழாய் கிணறு மட்டுமே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே கிராம நிர்வாக அலுவலரும் ஆய்வின் பொழுது உடனிருந்ததால் சென்ற வருடம் எந்த ஆழ்குழாய் கிணற்றுக்கு வருவாய் ஆவணங்கள் வழங்கினீர்கள் என்று விசாரித்தபொழுது 8 அங்குல அகலம் உள்ள ஆழ்குழாய் கிணற்றை காண்பித்து அதற்குத்தான் வழங்கப்பட்டது என தெரிவித்தார். ஆய்வில் அருகாமையில் உள்ள மின் இணைப்பு எண் 379 க்கு சொந்தமானவரிடம் விசாரித்த பொழுது 8 அங்குலம் அகலம் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் மனுதாரர் பல வருடம் என்ஜின் வைத்து நீர் இரைத்து விவசாயம் செய்ததாக தெரிவித்தார்.

**9.13** எனவே கடந்த 24.3.2012 அன்று நடைபெற்ற ஆய்வுக்கு பின்னரே கம்பத்திலிருந்து 70 மீட்டர் தூரத்திற்குள் அமையுமாறு 5 அங்குல அகல ஆழ்குழாய் கிணறு போடப்பட்டிருக்கக்கூடும் என்று தெரியவருகிறது. இதனை அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள பிவிசி குழாயின் அருகில் இருக்கும் புதிய மண்ணால் தெளிவாக அறிய முடிகிறது.

**9.14** மேலும் மனுதாரர் கடந்த 12.7.2012 க்கு முன்னரோ அல்லது பெரம்பலூர் வட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் விசாரணையிலோ தனது நிலத்தில் மற்றொரு ஆழ்குராய் கிணறு உள்ளது என கூறவில்லை.

**9.15** கடந்த 20.4.2005 ல் தயார்நிலை பதிவு செய்திட வழங்கப்பட்ட அறிவிப்பு கடிதத்தின்படி 22.7.2005 அன்று தயார்நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 18.10.2010 அறிவிப்பின்படி நிலுவையிலிருந்த தயார்நிலைப்பதிவுகள் இரண்டு லட்சம் சிறப்பு திட்டத்தில் 7 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு முதல் 5 பிரிவுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**9.16** மேற்படி புலஎண்ணில் ஏற்கனவே இருந்த 8 அங்குல அகல ஆழ்குழாய் கிணறு 70 மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்ததால் சிறுவிஸ்தரிப்பு பிரிவில் வகைப்படுத்தப்பட்டது.

**9.17** எனவே திரு. மு. உலகநாதன் தற்பொழுது 70 மீட்டருக்குள் 5 அங்குல அகல ஆழ்குழாய் கிணறு ஒன்றை அமைத்து ஒரு கம்பம் விஸ்தரிப்பு பிரிவில் தான் தனது ஆழ்குழாய் கிணறு

வருகிறது என கூறி தவறான முறையில் மின் இணைப்பு பெற முயற்சிக்கிறார் என்பது தெளிவாக தெரிகிறது.

**9.18** தற்பொழுது 2012–13 ஆண்டிற்கான விவசாய மின் இணைப்பு குறித்த இலக்கீட்டில் சாதாரண மற்றும் இரண்டு லட்சம் திட்டங்களில் நிலுவையில் உள்ள தயார்நிலை பதிவுகள் அனைத்தையும் ஒருங்கினைத்து பொது முன்னுரிமையை கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரரின் தயார்நிலை பதிவு சுத்தமல்லி பிரிவில் 2012–13 ம் ஆண்டு இலக்கீட்டில் உள்ளதால் வரிசைகிரமமாக தயார்நிலை பதிவு மூப்பின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துகொள்ளப்படுகிறது.

**9.19** மேல்முறையீட்டாளரின் 24.7.2012 மற்றும் 9.8.2012 தேதியிட்ட கடிதங்களிலுள்ள வாதங்களையும், எதிர் மனுதாரரின் 24.7.2012 நாளிட்ட கடிதத்திலுள்ள வாதங்களையும் மேலும் அவர்கள் இரண்டு கேட்புரை நாட்களிலும் எடுத்துரைத்த வாதங்களையும் ஆராயும் பொழுது இருவருமே ஆய்வு அறிக்கையில் கூறப்படும், மின் கம்பத்திற்கும் ஆழ்துளை கிணற்றிற்கும் இடைப்பட்ட தூரத்தை ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்த புல எண்ணில் உள்ள இரண்டு கிணறுகளில் ஒரு கிணறு 13.5.2011ம் தேதிக்கு பின்புதான் ஏற்படுத்தப்பட்டது என்பதிலும் இருவருடைய கருத்தும் ஒன்றுதான். ஆனால், விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டு, தயார்நிலை பதிவு செய்யும் பொழுது இருந்த ஆழ்துளை கிணறு எது என்பதில் தான் இருவருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது. எதிர்மனுதாரர், கிராம நிர்வாக அலுவலர் 8 அங்குல விட்டம் கொண்ட ஆழ்துறை கிணறுதான் அவர், சான்றளிக்கும் பொழுது இருந்தது என்று தெரிவித்துள்ளதால், எதிர்மனுதாரரிடம், அது சம்பந்தமான, ஆவணங்கள் இருந்தால் அனுப்பும்படி கேட்கப்பட்டது. எதிர் மனுதாரரும் தன்னுடைய 7.8.2012 நாளிட்ட கடிதத்தில் கிராம நிர்வாக அலுவலரின் 4.8.2012 நாளிட்ட சான்றிதழை இணைத்து அனுப்பியுள்ளார். அந்த சான்றிதழில், உல்லியங்குடி கிராம நிர்வாக அலுவலர், அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*" அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், 55, உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் எழுதிக் கொடுத்த சான்று.*

*மேற்படி நரியங்குழி கிராமத்தைச் சேர்ந்த முருகையன் மகன் உலகநாதன் என்பவருக்கு சொந்தமான பட்டா புன்செய் புல எண்.190/6B 0.22.0 ஏக்கரில் போர்வெல் உள்ளது என என்னால் 13.5.2011 அன்று சான்று வழங்கப்பட்டது. மேற்படி சான்று வழங்கும்போது இருந்த 8" விட்டம் உள்ள PVC பைப் கட்டிய போர் ஒன்று மட்டும் என சான்று வழங்கப்படுகிறது."*

**9.20** மேல்முறையீட்டாளர் திரு. உலகநாதன் அவர்கள் தன்னுடைய நாளிடப்படாத கடிதத்தில்(பெறப்பட்ட தேதி **28.9.2012**) கிராம நிர்வாக அலுவலர் **5** அங்குலம் போர்வெல்தான் முதலாவதாக போடப்பட்ட ஆழ்துளை கிணறு என்று சான்று அளித்துள்ளதாக கூறி அந்த சான்றினை அனுப்பி வைத்துள்ளார். அந்த சான்றிதழில் உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*“ அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், **55,** உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர் எழுதிக் கொடுத்த சான்று.*

*உடையார்பாளையம் வட்டம் நரியங்குழி கிராமத்தைச் சேர்ந்த முருகையன் மகன் உலகநாதன் என்பவருக்கு உல்லியங்குடி எல்லையில் புல எண். **190/6B**ல் இரண்டு போர்வெல் உள்ளது. இதில் **5** அங்குலம் போர்வெல் முதல் முறையாக போடப்பட்டுள்ளது என்றும் என இதன் மூலம் சான்று அளிக்கின்றேன்.”*

**9.21.** உல்லியக்குடி கிராம நிர்வாக அலுவலர், உரிமம்தாரருக்கு வழங்கிய சான்றிதழில் உலகநாதனுக்கு சொந்தமான புல எண்.**190/6B 0.22.0** ஏக்கரில் போர் உள்ளது என அவரால் **13.5.2011** அன்று சான்று வழங்கப்பட்டது என்றும், அப்படி சான்று வழங்கும் பொழுது **8**’’ விட்டம் உள்ள PVC பைப் கட்டிய போர்வெல் மட்டும் தான் என்று கூறியுள்ளார். ஆனால் அந்த கிராம நிர்வாக அலுவலர் **24.9.2012** நாளிட்ட தனது சான்றிதழில் உலகநாதனுக்கு புல எண்.**190/6B**ல் இரண்டு போர்வெல் உள்ளது என்றும், இதில் **5** அங்குலம் போர் முதல்முறையாக போடப்பட்டுள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

**9.22** ஒரே கிராம நிர்வாக அலுவலர் தன்னுடைய **4.8.2012** நாளிட்ட சான்றிதழில் **8** அங்குலம் போர்தான் **13.5.2011**இல் சான்று வழங்கும்பொழுதுள்ள ஒரே போர் என்று கூறிவிட்டு தன்னுடைய **24.9.2012** நாளிட்ட சான்றிதழில் உலகநாதன் இடத்திலுள்ள இரண்டு போர்வெல்களில் **5** அங்குலம் போர்தான் முதலில் போட்ட போர்வெல் என்று சான்று செய்வதால் இரண்டு சான்றிதழ்களுமே ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதால், தெளிவு பெறுவதற்காக, வட்டாட்சியர் உடையார்பாளையம் அவர்களுக்கு **13.5.2011**இல் திரு. உலகநாதனுக்கு சான்றிதழ் வழங்கும்பொழுது இருந்த ஆழ்துளை கிணறு எது என்றும், மேற்கண்ட இரு ஆழ்துளை கிணறுகள் தோண்டப்பட்ட நாள் எதுவென்றும் உறுதிப்படுத்த **28.9.2012** நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்கப்பட்டது. மேலும், **18..10.2012, 15.11.2012** மற்றும் **3.12.2012** ஆகிய நாளிடப்பட்ட கடிதம் மூலம்

நினைவுபடுத்தப்பட்ட பின்பு 14.12.2012 நாளிட்ட கடிதத்தில் ஜெயங்கொண்டான் வட்டாட்சியர் அவர்கள் கீழ்கண்டவாறு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

*‘‘பார்வையில் காணும் தமிழ்நாடு மின்வாரிய ஒம்புட்ஸ்மென் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி உடையார்பாளையம் வட்டம் உல்லியக்குடி கிராமம் புன்செய் புல எண்.190/6B தென்வடல் பாதைக்கு மேல்புறமாக பாதைக்கு அருகாமையிலுள்ள 5 அங்குல ஆழ்குழாயையும், அதன் மேற்பபுமுள்ள 8 அங்குல ஆழ்குழாயையும் 24.11.2012ம் தேதியன்று கிராமத்திற்கு முகாம் செய்து தலப்பார்வை செய்யப்பட்டது.*

*புன்செய் புல எண்.190/6பிஇல் 0.22.0 ஏர்ஸ் தென் வடல் பாதைக்கு றே்புறமாக பாதைக்கு அருகாமையில் உள்ள ஆழ்குழாய் 5 அங்குல விட்டமுள்ளது இந்த புலத்தில் முதன் முதலாக போடப்பட்ட ஆழ்குழாய் எனவும், அதனைத் தொடர்ந்து மேற்கண்ட புல எண்ணில் இந்த ஆழ்குழாய்க்கு மேற்கு திசையில் 8 அங்குல விட்டத்தில் இரண்டாவதாக ஒரு ஆழ்குழாய் தோண்டப்பட்டுள்ளது எனவும், கண்டறியப்பட்டள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இத்துடன் புலப்படம் மற்றும் கிராம கணக்குகளின் நகல்கள் இணைத்து அனுப்பி வைத்துள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ’’*

**9.23** மேற்படி வட்டாட்சியரின் அறிக்கையை கூர்ந்துபடிக்கும்பொழுது 5 அங்குல விட்டம் கொண்ட ஆழ்குழாய் தான் முதலில் போடப்பட்டுள்ளது எனவும், 8 அங்குல விட்டமுள்ள ஆழ்குழாய் இரண்டாவதாக போடப்பட்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

**9.24** 16.7.2012 அன்று மேல்முறையீட்டாளரும் எதிர் மனுதாரரும் கள ஆய்வு செய்யும்பொழுது 5 அங்குலம் விட்டமுள்ள ஆழ்துளை கிணறுக்கும் ஏற்கனவே இருந்த மின்கம்பத்திலிருந்து அளக்கப்பட்ட தூரம் 62 மீட்டர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர், இருவரின் முன்னிலையில் அளக்கப்பட்ட அளவுகள் என்பதினால் இந்த அளவுகளை இருவராலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ள அளவுகள் என்பதினால் மேல்முறையீட்டாளரின் ஆழ்குழாய் கிணறு 18.10.2012ல் உள்ள மின்கம்பத்திலிருந்து 70 மீட்டருக்குள் இருக்கிறது என்று தெளிவாகிறது.

**9.25** எனவே , ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு என்ற பிரிவின்கீழ்தான் உரிமம்தாரரின் விவசாய மின்னிணைப்புக்கான ஆணையின்படி வகைப்படுத்த வேண்டியது உள்ளது. எனவே, இந்த மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பு வேண்டி விண்ணபிக்கப்பட்ட 190/6பிஇல்

உள்ள 5 அங்குலம் விட்டம் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு என்ற பிரிவில் (one pole extention) விவசாய மின்னிணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. <u>முடிவுரை</u>**

**10.1** மேற்கண்ட பத்தி எண்.9ல் கொடுக்கப்பட்டுள்ள தீர்வின்படி, மேல் முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கப்பட்ட 190/6B ல் உள்ள 5'' விட்டம் கொண்ட ஆழ்துளை கிணறு, 18/10/2010 ற்கு முன் நடப்பட்ட மின் கம்பத்திலிருந்து 62 மீட்டர் தூரத்திலுள்ளது என்று வட்டாட்சியர் சான்று மற்றும் கூட்டு ஆய்வு அறிக்கையின் மூலம் தெளிவாவதால் அவருக்கு ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு (one pole extension) என்ற பிரிவில் விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, அவர், அவரின் தயார் நிலை பதிவில் ஒரு கம்பம் நட்டு விஸ்தரிப்பு (one pole extension) என்ற பிரிவில் அவரின் வரிசைப்படி மின் இணைப்பை வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கூறிய தீர்வுடன் மேல் முறையீட்டு மனு எண்.19/2012 ன் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு.எம். உலகநாதன்,
த/பெ. முருகையன்,
வடக்கு நரியங்குடி,
உல்லியக்குடி (அஞ்சல்),
உடையார் பாளையம் (வட்டம்),
அரியலூர் மாவட்டம்,

2) மேற்பார்வை பொறியாளர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றம் பகிர்மான கழகம்,
பெரம்பலூர்.

3. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.